Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 298/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ரவி |
| Father's Name | – | சதாசிவம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th March 2026.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1 present. Accused 2 absent. Accused 1, 2 counsel present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் நெகமம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 28.11.2015 ம் தேதி இரவு 22.00 மணிக்கு மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் செந்தில்முருகன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப் பெற்ற இண்டிமேசனைப் பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சுப்பிரமணியம் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலையக்குற்ற எண்.300/2015, சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவலறிக்கை **அசாஆ.4** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, 29.11.2015 ம் தேதி 17.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கனகராஜ் மற்றும் பரமசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே பார்வை மகஜர் **அசாஆ.5**, மாதிரி வரைபடம் **அசாஆ.6** ஆகும்.

பின்னர் அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவயிடமான வஞ்சிபாளையம் தெற்குதோட்டம் கோழிப்பண்ணை அருகில் உள்ள தண்ணீர் தொட்டி அருகே இருந்து சுமார் 77 செ.மீ நீளமுள்ள இரும்பு கம்பி ஒன்றை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வழக்கில் காயம்பட்ட சுப்பிரமணி மற்றும் ஆறுச்சாமி ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முருகானந்தம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் அளித்த காயச்சான்றிதழை பெற்றேன். அந்த காயச்சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.8, அ.சா.ஆ.9** ஆகும்.

பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.10** ஆகும்.

பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கெதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் சாட்சிகளும் எதிரிகளும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் மற்றும் பக்கத்து தோட்டத்துக்காரர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சிகளும் சின்னுதாய் மற்றும் ஜோதிமணி, ஜெயப்பிரகாஷ், ஜெயபிரியா சாந்தாமணி, மஞ்சுபிரியா ஆகியோர்களுக்கிடையே ஏற்கனவே வண்டித்தட பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி நபர்கள் எதிரிகளை அடித்ததாக நெகமம் காவல்நிலையத்தில் குற்ற எண்.299/2015 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி குற்ற எண்ணில் 294(பி), 147, 148, 506(2), 307 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் SC No.80/2021 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம் எதிரி கொடுத்த புகாரினை பெற்றுக்கொண்டு, முதலில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், இந்த வழக்கினை அதன் பின்னிட்டுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

மேற்படி வழக்கில் 2ம் எதிரியை கற்கள், மம்மட்டி பிடி, கட்டை ஆகியவற்றை கொண்டு தாக்கியதாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வண்டி தடம் குறித்து எதிரிகளுக்கும் நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிரியின் சகோதரர் சம்பவத்திற்கு இரண்டு நாள்களுக்கு முன்பு இறந்த காரணத்தாலும் அதனால் வண்டிதடத்தில் அ.சா.1, 2 குழி தோண்டியதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அது எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை.

வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்ட இடம் அ.சா.1ன் கோழிப்பண்ணை தொட்டி என்றால் சரிதான். அ.சா.1, 2 விபத்து பதிவேட்டில் கையாலும் கட்டையாலும் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சான்று பொருள் வழக்கிற்காக உற்பத்தி செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளை தாக்கிவிட்டு வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரினை கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை

செய்யாமல் எதிரிகளின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், எதிரிகளுக்கும் கைப்பற்றப்பட்ட பொருளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi